செ.வெ.எண்:07 நாள்:06.01.2020

பெரம்பலூர் மாவட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் வேப்பூர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டிடங்களையும், பெண்ணகோணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

அதன் விபரம் பின்வருமாறு:

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வேப்பூர் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டிடங்களையும், பெண்ணகோணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் புதிய ஆய்வகங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக இன்று (06.01.2020) திறந்து வைத்தார்கள்.

அதன்படி வேப்பூர் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனமானது ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் தலா 520 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் 67 சதுரமீட்டரில் முகப்பு என மொத்தம் 1,625 சதுரமீட்டர் பரப்பளவில் இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தரைதளத்தில் இரண்டு வகுப்பறைகள் முதல்வர் அறை கணிப்பொறி ஆய்வகம், நிர்வாக அலுவலகம், உணவகம், மற்றும் கழிவறை கட்டிடங்களும், முதல் தளத்தில் பணியாளர்கள் அறை, கலை மற்றும் கைவினைவளமையம், சுகாதாரம் உடற்கல்வி ஆராய்ச்சி மையம், ஆசிரியர்கள் அறை(பெண்கள்), நூலகம், கணித ஆய்வகம், பயிற்சி அறை மற்றும் கழிவறை கட்டிடங்களும், இரண்டாம் தளத்தில் கூட்ட அரங்கம், இயற்பியல் ஆய்வகம், உயிரியல் ஆய்வகம், பொருள் இருப்பு அறை, ஆசிரியர்கள் அறை(ஆண்கள்), மற்றும் கழிவறை கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பெண்ணகோணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ. 1.19 கோடி மதிப்பீட்டில் புதிதாக 4 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், ஆண்கள், பெண்கள் கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்டவைகள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டுமானப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்ததை முன்னிட்டு வேப்பூர் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டிடங்களையும், பெண்ணகோணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் புதிய ஆய்வகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக இன்று திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் அங்கிருந்த பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். மேலும், கிராமப்புறங்களில் உள்ள மாணவ, மாணவிகளும் கல்வித்துறையில் சாதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு வகையான திட்டங்களை மாணவர்கள் முறையாக பயன்படுத்திக்கொண்டு சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் சிறந்த குடிமகனாக வாழவேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.மதிவாணன், செயற்பொறியாளர் திரு.மணிவண்ணன், உதவி பொறியாளர் திரு.தேவேந்திரன், குன்னம் வட்டாட்சியர் திருமதி.சித்ரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**